Registerd as a Newspaper in Ceylon

★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண்: 49 | மலர் 10
போன் 339 | இதழ் 175
National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் விலை ஆடி 20 ஜ. அவ் 9 ஞாயிற்றுக்கிழமை (4-8-63)




# ஆலயப்பிரவேச பிரச்னையில் அமைதித் தீர்வுக்கு அறிகுறி

## சைவப் பெரியார் குழுவின் முயற்சிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரசியல் ஸ்தாபனங்களோ, அரசியல் தலைவர்களோ, இந்துக்களல்லாதவர்களோ தலையிடுவதைத் தவிர்த்து, அரசாங்க அதிகாரிகளின் தலையீட்டையும் தவிர்த்து சைவசமயத்தவர்களின் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை, யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள சகல ஆலயங்களிலும் மிகவிரைவில் சுமுகமாக நடத்தி வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலயப்பிரவேசப் பிரச்னையை இந்து சமயப் பெரியார்களே தீர்த்துவைக்க முன்வந்துள்ளதற்கு பலரும் வரவேற்புத் தெரிவித்திருப்பதுடன் இந்த முயற்சிக்கு ஆதரவும் அளிக்க முன்வந்துள்ளனராம்.

சென்ற மாதம் 31-ந் திகதி யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட முடிவைத் தொடர்ந்து ஆலயப்பிரவேச முயற்சிகளை மேற்கொள்வதற்கான குழுவை உருவாக்கும் வேலைகளை குழுவின் அமைப்பாளர்களான திரு. மு. வைரமுத்துவும் திரு. ச. அம்பிகைபாகனும் ஆரம்பித்துள்ளனர்.

இக்குழுவின் முதல் கூட்டம் இம்மாதம் 8-ந் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னும் சில வாரங்களுக்குள் சமயபக்தியுள்ள ஆசாரசீலர்களான ஹரிஜனர்கள் சிலரை, இக்குழுவினரே அமைதியான முறையில், சில ஆலயங்களுக்குள் அழைத்துச்செல்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### அரசாங்க அதிபர்

கொழும்புக்குச் சென்றிருந்த அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா அதிகாரிகள் பலருடன் ஆலோசனை நடத்தியபின் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்.

ஆலயப் பிரவேசத்தைத் தடுப்பவர்மீது பொலிசார் நடவடிக்கை எடுப்பதற்கு, சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்துடன், ஒருவர் தமது கடமையைச்செய் [illegible] மேற்பட்டோர் கூடி நிற்பது சட்டவிரோதமானதெனக் கூறும் பீனல் சட்டத்தின் 138-வது விதியும், போதுமென்றும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தில் திருத்தம் அவசியமில்லையென்றும் அரசாங்க அதிபருக்கு அட்டர்னி ஜெனரல் தெரிவித்திருக்கிறார்.

## இரண்டரை லட்சம் செலவில் புதிய பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்துக்கான புதிய பொலிஸ்நிலையம் ஒன்று 2,50,000 ரூபா செலவில் கட்டப்படவிருக்கின்றது. இதற்கான நிதி இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய பொலிஸ் நிலையத்துக்கான கட்டடவேலைகள் இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் ஆரம்பமாகும். அடுத்தவருடம் டிசம்பர் மாதத்துக்குள் கட்டட வேலைகள் முடிவடைந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது பொலிஸ்நிலையமுள்ள காணியிலேயே கட்டப்படவிருக்கும் புதிய பொலிஸ்நிலையம் இரண்டு மாடிகளைக் கொண்டதாகவும் வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் அலுவலகம், உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் அலுவலகம், இரகசிய பொலிஸ் பகுதி, குற்றத்தடுப்பு பகுதி, போக்குவரத்து பகுதி ஆகியவற்றைத் தனித்தனியே கொண்டதாகவும் இருக்கும்.

புதிய பொலிஸ்நிலையத்துக்கான டெண்டர்கள் இம்மாதத்தில் கோரப்படவிருக்கின்றன. [எ) நி.]

## பொலிஸ் அதிபரும் கொழும்பில் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக பொலிசார் தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கமும், காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சி தவராசாவும் அவசரமாகக் கொழும்பு விரைந்துள்ளனர்.

விமானத்தில் நேற்று கொழும்பு சென்ற இவர்கள் நேற்றுமாலை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அபயகுணவர்த்தனவையும், உதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஈலியன் பெர்ணண்டோவையும் சந்தித்து இதுபற்றி ஆராய்ந்தனர்.

இன்று காலையும் மேலும் சில அதிகாரிகளும் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் அட்டர்னிஜெனரலுடனும் இதுபற்றிய ஆலோசனைகள் கோரப்படும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைத் தொடர்ந்து மேலும் சில சைவாலயங்களின் பிரச்னைகள் பற்றியும் இங்கு கோரப்படும். [எ. நி]

## சரக்கு வண்டி தடம்புரண்டது

### யாழ்தேவி தாமதம்

வவுனியா, சனி

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற யாழ்தேவியில் புறப்பட்ட பிரயாணிகள், புளியங்குளத்திலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட யாழ்தேவியில் வந்த பிரயாணிகள் வவுனியாவிலும் இன்று தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு வவுனியாவிலிருந்து ஒரு மைல் தொலைவில் ரயில் பாதையில் ஏற்பட்ட ரயில் விபத்தே காரணம்.

கன்னூரிலிருந்து காங்கேசன்துறைக்கு களிமண் ஏற்றி வந்த சரக்கு வண்டி வவுனியாவுக்கு ஒருமைல் தூரத்

[6ம் பக்கம் பார்க்க]

## தென்னிலங்கையிலிருந்து நெசவு ஆசிரியைகள்

### நல்ல ரக துணி உற்பத்திக்கு உப சபாநாயகர் யோசனை

உடுப்பிட்டி, சனி

"இலங்கை தொழில் துறையில் அதிக அபிவிருத்தி அடைந்து வருகின்றது. நெசவுத்தொழில் நாடு பூராவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இலங்கை நெசவு சாலைகளில் உற்பத்தியாகும் துணிகள் தரத்தில் குறைந்தவைகள் அல்ல. நாம் இத்துணிகளை வாங்கி ஆதரிப்பதின் மூலமே உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஊக்கம் கொடுக்கலாம். இதனால் பலர் வேலை வாய்ப்பும் பெற்றுக்கொள்ளுகின்றனர்."

மேற்கண்டவாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டியில் நெசவுசாலையொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார். எட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தினரால் கரவை நச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தின் அருகாமையில் அதிக செலவில் நிறுவப்பட்ட இந்நெசவுசாலைத் திறப்புவிழா சமாஜத் தலைவர் வித்துவான் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்றது.

"பருத்தி உற்பத்தி செய்யும் நாடுகளிலேயே நெசவு செய்யவேண்டுமென்பது தவறு. ஒரு ருத்தல் பருத்தி கூட உற்பத்திசெய்யாத ஜப்பான் உலகம் பூராவும் நல்லரக துணிகளை ஏற்றுமதி செய்வது அவர்களின் வியத்தகு முன்னேற்றமாகும். தென்னிலங்கை

[6-ம் பக்கம் பார்க்க]

புதிய வரவு செலவுத் திட்டம்

## "ஒரு ஆக்கரீதியான வரவுசெலவுத் திட்டம்"

—வர்த்தக சபைத் தலைவர்

### தொழிலாளியைப் பாதிக்கும் என்கிறார் தொழிலாளர் தலைவர்

கொழும்பு, சனி

புதிய நிதியாண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் 105 கோடி ரூபாவைச் சரிக்கட்டுவதற்கான யோசனைகளை நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா நேற்று நிகழ்த்திய தமது வரவு-செலவுத்திட்ட உரையில் தெரிவித்திருந்தார். இந்த யோசனைகள் அதிக உற்சாகத்துடன் வரவேற்கப்படவுமில்லை; கடும் எதிர்ப்பைத் தேடவுமில்லை. "பச்சைத் தண்ணீர் வரவு-செலவுத்திட்டம்" என்று சிலர் கருத்துத்தெரிவித்தனர்.

இலங்கை வர்த்தகசபை, இலங்கை முதலாளிமார் சம்மேளனம் ஆகியவைகளின் தலைவர் திரு. [illegible] விஜயசிங்கா கருத்துத் தெரிவிக்கையில் "மொத்தத்தில் இது ஒரு ஆக்கரீதியான வரவு-செலவுத் திட்டம்" என்றார்.

குறைந்த வருமானமுடையவர்களின் நேர்முக வரிகளில் குறைப்புச் செய்ததும் ஜவுளி இறக்குமதித் தீர்வையை ரத்துச்செய்ததும் முக்கியமான அம்சம் என்று கூறிய திரு. விஜயசிங்கா, வருமான வரியை மாதாமாதம் சம்பளத்தில் கழிக்கும் திட்டத்தை வரவேற்றார். இதற்கு முதலாளிமார் ஒத்துழைத்தால் வரி அறவிடும் செலவு வருமான வரி இலாகாவுக்கு மீதமாகுமென்றார்.

வரிவிதிப்பு கமிஷன் தெரிவித்த சிபார்சுகள் அனைத்தும் அமுல்செய்யப்படாததற்காக திரு. விஜயசிங்கா ஏமாற்றம் தெரிவித்தார்.

[6ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இங்குள்ள எதுவும் உமக்குச் சொந்தமல்ல என்ற உண்மையை மறக்காதீர். நீங்கள் உள்பட எல்லாமே இறைவனின் உடைமை. எனது எனது என்பது அஞ்ஞானத்தின் அறிகுறியே.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

ஆவணி மாதம் 20-ந் திகதி
(4-8-68)


# "சோல்பரி அரசியல் அமைப்பு நம்நாட்டுக்கு ஏற்றதல்ல

## புதிய அமைப்பை உருவாக்க அரசியல் நிர்ணயசபைவேண்டும்"

### பௌத்த காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, சனி

இலங்கைக்கு புதிய அரசியல் அமைப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசியல் நிர்ணய சபையொன்றைக் கூட்டும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் 777 அங்கத்தவர்களைக் கொண்ட அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் நிர்வாகசபையில் ஏகமனதாக நிறைவேறியது.

காங்கிரஸ் தலைவர் திரு. எச். டபிள்யூ. அமரசூரிய தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சோல்பரி அரசியல் அமைப்பு இந்நாட்டுக்கு ஏற்றதல்லவென்று நிராகரிக்கப்பட்டது.

சமஷ்டி அமைப்பு, உண்மைகள் மசோதா போன்றவற்றை உருவாக்கி அரசியல் அமைப்பில் ஒட்டுப்போடும் சகல முயற்சிகளையும் நிறுத்தும்படியும் இவ்வித முயற்சி அந்நிய ஆட்சியின் கீழிருந்ததைவிட சிங்கள பௌத்தர்களை மேலும் மோசமான, ஆதாரமான நிலைக்குக் கொண்டுசெல்லுமென்றும், சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்குமிடையிலுள்ள சந்தேகங்களை நீக்கவும் அந்நிய ஆட்சியினரால் விட்டுச்செல்லப்பட்ட பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும், அந்நிய ஆட்சியிட்டுச் சென்றவைகளால் நாடு முன்னேற முடியாமலிருக்கும் இடையூறுகளை நீக்கி முன்னேற்றத்துக்கான வழிவகைகளை மேற்கொள்வதற்கும் தகுதியானவர்களின் அதிகாரத்தைப் பெற்ற புதிய அரசியல் அமைப்பு ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசியல் நிர்ணயசபை ஒன்றைக் கூட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குச் சகல நடவடிக்கைகளையும் எடுப்பதென்றும் பௌத்த காங்கிரஸ் தீர்மானித்தது.

## அமைச்சர் காரியக்காரர்

இலங்கையின் சரித்திரத்திலேயே மிகக் கூடுதலான தொகை துண்டுவிழும் வரவு—செலவுத் திட்டத்தைத் தயாரித்தவர் என்று பெயர் பெற்றுள்ள நிதியமைச்சர் யு. பி. வன்னிநாயகா துண்டுவிழும் தொகையைச் சமாளிப்பதற்கு தெரிவித்துள்ள யோசனைகள் சலசலப்பை ஏற்படுத்தாமல் "அமைதியான காரியக்காரர்" என்ற பெயரையும் தேடிக் கொடுத்திருக்கிறது. பெரும் ஆரவாரமான வரவேற்பையோ, கடும் எதிர்ப்பையோ தேடிக் கொடுக்காத 'பச்சைத்தண்ணி' வரவு—செலவுத் திட்டம் என்று சிலர் சொன்னாலும் குறைந்த வருமானமுள்ளவர்களும் சாதாரணப் பொதுமக்களும் மனக்கசப்படைவதற்கு நிதியமைச்சர் இடம் வைக்கவில்லை.

புதிய வரிவிதிப்புயோசனைகள் பெரும்பாலும் குடும்பப் பெண்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையிலிருக்கின்றன. குடும்பத்தின் நிலையை அதுவும் குறைந்த வருமானமுள்ள நடுத்தரக் குடும்பங்களின் கஷ்டத்தை நிதி அமைச்சர் ஓரளவு உணர்ந்திருக்கிறார் என்று குடும்பப் பெண்கள் ஆறுதல் கொள்வதற்கு இடமுண்டு. நாணயமதிப்புக் குறைவு, அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் காரணமாக அப்பிக் பட்ஸின் போன்ற பாவனை ஜவுளிகளின் விலை உயர்த்தப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த துணிகளின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தீர்வையை நிதி அமைச்சர் ரத்துச் செய்திருப்பதன்மூலம் துணி விலையேற்றத்தை தடுத்திருக்கிறார். சாராயத்தின் விலையையும் சிகரட்டின் விலையையும் சிறிது அதிகரித்ததன் மூலமும் குடும்பப் பெண்கள் ஆறுதலடைவர். ஆனால் தென்னை வடிசாராயத்தின் விலையை மட்டும் உயர்த்தியதன் மூலம், உடலுக்குப் பெருந் தீமான கசிப்பு உற்பத்தி அதிகரிக்கவும் சாராயத்தில் கலப்படம் அதிகரிக்கவும் வழியேற்படலாம். கசிப்புத் தொல்லையை ஒழித்துக்கட்டி சாராயம், மற்றும் மதுபானங்களின் விற்பனையையும் படிப்படியாகக் குறைத்து பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை திட்டமிட்டு அரசாங்கம் அமுல் நடத்தினால் பயன் அதிகம் கிடைக்கும். குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வருமான வரியில் அளித்திருக்கும் சலுகை அதிகமில்லாவிடினும் நிம்மதியளிப்பதாகும். வருமான வரியை மாதா மாதம் சம்பளத்தில் கழிப்பதென்ற யோசனை வரிசெலுத்துவோருக்கும் வருமானவரி இலாகாவினருக்கும் ஆறுதலளிப்பதாகும்.

புதிய கம்பனிகளுக்கு 25 சதவிகித வரிச்சலுகை அளிக்கும் திட்டம் புதிய தொழில்களில் முதலீடு செய்ய ஊக்கமளிப்பதாகும். இது உள்நாட்டில் உற்பத்தி அதிகரிக்கவும் வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பளிக்கவும் உதவும். ஆனாலும் விலைவாசி உயர்வைக் குறைப்பதற்கான உறுதியான, தீவிர முயற்சிகளுக்கு நிதி அமைச்சர் வழிகாட்டவில்லை. வாழ்க்கைச் செலவு குறைய வேண்டுமென்பதுதான் மக்கள் விருப்பம்.

வரவு—செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் 105 கோடி ரூபாயை உள்நாட்டில் 37.5 கோடி ரூபாய் கடன் எழுப்புதல் மூலமும் அயல்நாடுகளிலிருந்து பெறும் 21.3 கோடி ரூபாய் உதவி மூலமும் பண்ட உதவி விற்பனை மூலம் கிடைக்கும் 26.3 கோடி நிதிமூலமும் புதியவரி மாற்றங்களால் கிடைக்கும் தொகை மூலமும் சரிக்கட்டுவதற்கு நிதியமைச்சர் திட்டமிட்டுள்ளார்.

புதிய வரிகள் மூலமும், வெளிநாட்டு உதவிகள் மூலமும் மட்டுமல்லாது வேறு எந்தவகையிலும் எவ்வளவு பணம்தேடியும் அவற்றை நாட்டின் அபிவிருத்திக்குச் செலவிட ஒதுக்கினாலும் அவற்றை நாட்டுப்பற்றுடன் அரசாங்க ஊழியர்களும் பொதுமக்களும் பயன்படுத்தாவிட்டால் நாட்டின் பொருளாதார நிலை சீராக முடியாது. விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், சமூகசேவை, கல்வி, சுகாதாரம் ஆகியவைகளுக்கென பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பணத்தை சரியான ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டங்களை உருவாக்கி, ஒருசதம் கூட வீணாகாதவாறு உயர் அதிகாரியிலிருந்து சாதாரணகனிஷ்ட ஊழியர்வரை நாட்டுப்பற்றுடன் செலவு செய்யவும் இதற்கு விவசாயிகளும் தொழிலாளிகளும் பொதுமக்களும் உதவியும் ஒத்துழைப்புமளித்தால் இன்னும் பத்துவருடங்களின்பின் பற்றாக்குறை வரவு—செலவுத் திட்டம் [illegible] வேண்டிய [illegible] இங்கு நடைபெ[illegible]

## 'வருங்கால வாழ்வு ஒழுக்கத்தில்தான் தங்கியுள்ளது'

### வடபகுதி உதவி வித்தியாதிபதி கூறுகிறார்

சுழிபுரம், சனி

மாணவர்களிடம் ஒழுக்கத்தைப் போதிப்பதில் ஆசிரியர்களின் கடமையிலும் பார்க்க பெற்றோர்களின் பங்கு தான் அதிகம். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் அவர்கள் நல்லவர்களாகவும் திறமைசாலிகளாகவும் வந்துவிடுவார்கள் என கனவு காணாது அவர்களை மிகவும் ஒழுக்கமுடையவர்களாகவும், வல்லவர்களாகவும் திகழச் செய்வதற்கு தத்தமது வீடுகளிலேயே பழக்கிக் கொடுக்க வேண்டும். ஒரு மாணவனுடைய வருங்கால வாழ்வு அவனது ஒழுக்கத்தில் தான் தங்கியுள்ளது.

இவ்வாறு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி பெற்றோர் தின விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் குறிப்பிட்டார்.

விழாவுக்கு கல்லூரி அதிபர் என். சிவஞானம் தலைமை வகித்தார்.

திரு. தணிகாசலம் மேலும் பேசுகையில், இன்று ரயில்களில் எமது மாணவர்கள், வயது வந்தவர்கள் தினமும் பல்லாயிரக்கணக்கான ரூபாயை குடிவகைக்காகச் செலவு செய்து ஒழுக்கம் குன்றியவர்களாக இருப்பதை நாம் காண்கின்றோம், அறிகின்றோம். இந்நிலைமை மேலும் வளராது பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளில் பெரிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பாடசாலை மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## பௌர்ணமி கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகர சபை அளிக்கும் பௌர்ணமிக் கலைவிழா எதிர்வரும் 8-ம் திகதி யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியினர் மேடையேற்றும் 'பூதத்தம்பி', தியாகு நாடகமன்றத்தினரின் 'ஆனந்தக் கண்ணீர்', சஹானா குழுவினரின் 'மெல்லிசை' ஆகியன இடம்பெறவுள்ளன.

(ஈ. நி.)

## தமிழாசிரியர்க்கு அதிபர் பதவி

உடுப்பிட்டி, சனி

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் விடாமுயற்சி பலனளித்துள்ளது. தமிழாசிரியர்களுக்கும் அதிபர் பதவி வழங்கவேண்டுமென்ற கோரிக்கைக்குக் கல்வியமைச்சு சம்மதம் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து 12 தமிழாசிரியர்கள் 3ம் தர அதிபர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருசிலருக்கு ஆங்கில அறிவு சிறிதுமில்லை. இதன் மூலம் தமிழாசிரியர்களின் அந்தஸ்து உயர்ந்துள்ளது.

இத்தகவலை வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு ஆ. க. மாணிக்கம் வடமராட்சித் தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில் வெளியிட்டார்.

## சைவத்தின் தனித்துவம்

அளவெட்டி, வெள்ளி

"நான் அடியவன் என்ற தத்துவத்தைக் கொண்டிருப்பது சைவசமயமாகும். இதுவே சைவத்தின் தனிச்சிறப்பாகும்" என கூத்தியவத்தை இராமமுன்னேற்றச் [illegible]

சுந்தரர் குருபூசையில் உரையாற்றிய சைவப்பிரசாரகர் திரு. வி. நல்லையா கூறினார். வேறு பலரும் பேசினர்.

திரு. மு. வைரவப்பிள்ளை விழாவை ஆரம்பித்து வைத்தார்.

## நாடும் நடப்பும்

"வானொலியைக் கேட்டே விவசாயம் செய்து வெற்றி கண்டுவிடலாம்போல் இருக்கிறது" என்று ஒரு நண்பர் சொன்னார்.

எந்த வானொலி?

"திருச்சி வானொலிதான்; இலங்கை வானொலியல்ல" என்றார் நண்பர்.

எந்த மாதத்தில் என்னென்ன பயிர்களைச் செய்யலாம்; விதைகளை எப்படி விதைக்கவேண்டும்; பசளை எப்படிப் போடவேண்டும்; எந்த உரம் நல்லது; எப்படியான பூச்சிகள் எந்தெந்தக்காலத்தில் வரும்; அவைகளை அழிப்பதற்கு என்ன மருந்து எப்படித் தெளிக்க வேண்டும்; இத்தனை விஷயங்களையும் வெறும் போதனையாகச் சொல்லாமல் சம்பாஷணை, பாட்டு, நாடகம் இப்படிப் பலபல ரகத்தில் சுவைபட, மக்களுக்குத் திருச்சி வானொலி, தினசரி பல்வேறு நிகழ்ச்சிகளில் எடுத்துச் சொல்கிறது. விவசாயத்தைப் பற்றி நினைக்காதவன்கூட மண்வெட்டி பிடிக்கத் தொடங்கிவிடுவான்.

நமது வானொலியிலோ "இவந்தைப் பழம், இவந்தைப் பழம்" ரகப் பாடல்கள்தான்!

பிரதமர் டட்லி சேனநாயகா மட்டும் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தைப் பற்றிக் கனவு கண்டால்போதுமா? அவரது அமைச்சர்களும், அரசாங்கத்திலுள்ள அதிகாரிகளும் கொஞ்சம் அதிகமாக அக்கறை செலுத்தினால் என்ன?

ஃ ஃ ஃ

உணவு இறக்குமதி குறைந்துவிட்டது என்றும் உள்நாட்டில் உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்றும் அமைச்சு அதிகாரிகள் கொடுக்கும் புள்ளி விபரங்களை நமது வானொலி,—இலங்கை நமது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் செய்தி அறிக்கையில் தெரிவிப்பதுடன் திருப்தியடைந்துவிடுகிறது.

பங்கீட்டரிசியைப் பாதியாகக் குறைத்தால் இறக்குமதி குறையாமலிருக்குமா, இறக்குமதி பாதியாகக் குறைந்துவிட்டது என்றால் உற்பத்தி அதிகரித்ததென்று அர்த்தமா என்ற எதிர்க்கட்சிப் பத்திரிகை ஒன்று கேட்கிறது.

இதற்கு நிதியமைச்சர் வரவு-செலவுத் திட்ட உரையிலேயே பதிலளித்திருக்கிறார். சென்ற வருடத்தில் அதாவது 1967ம் ஆண்டில் 551 லட்சம் புசல் நெல் விளைந்திருக்கிறது. 1965ல் 363லட்சம் புசலும், 1966ல் 457லட்சம் புசலும் விளைந்த நாட்டில் 1967ம் ஆண்டில் 551 லட்சம் விளைந்ததென்றால் உற்பத்தி அதிகரிக்கவில்லை என்று சொல்லலாமா?

ஆனால் இதற்கும் அந்த எதிர்க்கட்சிப் பத்திரிகை ஏதாவது பதில் சொல்லும்!

— ஊர்சுற்றி

வடமராட்சி

## ஆசிரியர் சங்கம் எதிர்ப்பு

உடுப்பிட்டி, சனி

பாடசாலைகளின் விடுமுறைகாலத்தைக் குறைத்து பாடசாலை நாட்களைக் கூட்டுவதற்குக் கல்வியமைச்சர் எடுத்துவரும் முயற்சிக்கு வடமராட்சித் தமிழாசிரியர் சங்கம் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இதனால் கல்வித்தரம் பாதிக்கப்படுமெனவும் மேற்படி ஆசிரியர் சங்கம் எடுத்துக்காட்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் பகுதிகளில் வாழும் அராபியர் நிலை

## ஐ. நா. விசாரிப்பதற்கில்லை என்கிறார் யூ தாண்ட்

நியூயோர்க், ஆக. 3
இஸ்ரேலின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வாழும் அரபு மக்கள் பற்றிய நிலையை விசாரிப்பதற்கென அப்பகுதிகளுக்கு ஐ. நா. ஒரு விசாரணைக் கமிஷனை அனுப்பி வைப்பதென்பது சாத்தியமில்லை என்று ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் அறிவித்துள்ளார்.

அப்படியானால் அரபுப் பகுதிகளில் வாழும் யூதர்கள் நிலையை ஆராயும் முகமாக அமைக்கும் ஐ. நா. விசாரணைக் கமிஷனை அனுப்பப்படவேண்டுமென்ற கோரிக்கையும் எழலாமென்றும், இந்தவித நடவடிக்கை ஐ. நா. தீர்மானங்களுக்கு அப்பாற்பட்டதாகுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## 'ஆபிரிக்காவுக்கு சுதந்திரம் வழங்கு'

சோபியா, ஆக. 3
மூவாயிரத்துக்கும் அதிகமான உலக வாலிபர் விழாப் பிரதிநிதிகளும், சோபியா வாசிகளும் இளம் பயனியர் மண்டபத்தில் கூடியபோது 'ஆபிரிக்காவுக்கு சுதந்திரம் வழங்கு' என்று கோஷித்தனர்.

143 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த ஒருமைப்பாட்டு கூட்டத்தில் கூடினர். உலக வாலிபர் விழா தொடர்ந்து நடக்கிறது.

# பிரான்ஸ்மீது சமஷ்டி நைஜீரியா குற்றச்சாட்டு

லாகோஸ், ஆக. 3
கிழக்கு நைஜீரியாவின் பிரிவினைப் 'பியாவ்ரா'வுக்கு அண்மையில் பிரான்ஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. அடிஸ் அபாபாவில் ஆரம்பிக்கவிருக்கும் நைஜீரிய சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பாதிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதாகச் சமஷ்டி நைஜீரியா குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன் தனது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் அது பிரான்ஸின் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

பியாவ்ரா மக்கள் தாமே தமது சுயநிர்ணயத்தை அமைத்துக்கொள்ள வேண்டியவர்களென்று பிரான்ஸ் அண்மையில் தெரிவித்திருந்தது.

## விமான விபத்தில் 11 பேர் மரணம்

ரோம், ஆக. 3
மிலானுக்கு அருகே, நேற்று ஓர் இத்தாலிய விமானம் விழுந்து நொறுங்கியதில், 11 பேர் உயிரிழந்தனர் மற்றும் இருவரைக் காணவில்லை. 82 பேர் உயிர் தப்பினர்.

ரோமிலிருந்து மொண்ட்ரீலுக்குச் சென்றுகொண்டிருந்த இவ்விமானம், புயல் ஒன்றினால் அலைக்கப்பட்டு குன்றில் மோதி நொறுங்கியது.

# ரொடீஷிய ஆட்சிக்கு கல்லூரி அதிபர் கண்டனம்

சலிஸ்பரி, ஆக. 3
ரொடீஷியத் தலைநகரான சலிஸ்பரியிலுள்ள பல்கலைக் கழகக் கல்லூரியின் அதிபர் ஒருவரான பேராசிரியர் திரு. மில்லர், ரொடீஷிய அரசாங்கத்தின் இனப்பாகுபாட்டுக்கொள்கையை வன்மையாக கண்டித்துள்ளார்.

தற்போதைய ரொடீஷிய ஆட்சியில் ஸ்டாலினிஸ, ஹிட்லரிய அம்சங்கள் பல பொருந்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டில் சில பகுதிகளை, வெவ்வேறு இனங்களுக்கென ஒதுக்கியிருப்பதை, 'நாகரிகமற்ற, காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கை'யென அவர் வர்ணித்தார்.

## கச்சதீவும் கண்டேவியாவும்

புதுடில்லி, ஆக. 3
இலங்கையில் இந்தியத் தூதுவராகக் கடமையாற்றும் திரு. கண்டேவியா, புதுடில்லி வந்தசேர்ந்துள்ளார்.

அவர், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியை சந்தித்து, கச்சதீவுப்பிரச்னை பற்றி இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்குமிடையேயான பேச்சுகளுக்கு ஒழுங்குகள் செய்வது சம்பந்தமாக ஆராய்ந்தனர்.

# 'றொபேட் கென்னடியை நான் கொல்லவில்லை'

—ஷேர்ஹான்

லொஸ் ஏஞ்சல்ஸ், ஆக. 3
அமெரிக்க செனட்டர் திரு. றொபேட் கென்னடியைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஷேர்ஹான், லொஸ் ஏஞ்செல்ஸ் நீதிமன்றமொன்றில் தாம் குற்றவாளியல்ல என்று தெரிவித்தார். 5 பேரைக் கொலைசெய்யும் நோக்கத்துடன் காயப்படுத்தினதாக அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார்.

பலத்த பாதுகாப்புச்செய்யப்பட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஒருவர் முன்னிலையில் ஷேர்ஹான் தமது மறுப்பை வெளியிட்டார்.

வழக்கு விசாரணையை நவம்பர் 1ந் திகதி ஆரம்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

## 3 நாடுகளின் விமான பஸ்

பாரிஸ், ஆக. 3
பாரிஸில் கூடிய பிரிட்டிஷ், பிரெஞ்சு, மேற்கு ஜெர்மனிய மந்திரிகள், இலர், மூன்று நாடுகளும் இணைந்து தயாரிக்கும் விமான பஸ் திட்டத்தைச் செய்துமுடிப்பதென முடிவு செய்துள்ளனர்.

இந்த விமான பஸ், 300 பிரயாணிகள்வரை ஏற்றிச் செல்லக்கூடியதாகும்.

பாரிஸில்

## வியட்னும் சதுரங்கம்

பாரிஸ், ஆக. 3
பாரிஸில் நடைபெறும் வியட்னும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் வட வியட்னும் கோஷ்டிக்குத் தலைமைதாங்குபவர், வட வியட்னும், இராணுவப் பதில் குறைப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்ற அமெரிக்கக் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

வட வியட்னும் மீதான அமெரிக்கக் குண்டுவீச்சு, எவ்வித நிபந்தனையுமின்றி முதலில் நிறுத்தப்படவேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

## சுதந்திரம்பெறும் சுவாஸிலாந்து

லண்டன், ஆக. 3
தெற்கு ஆபிரிக்க கண்டத்திலுள்ள சுவாஸிலாந்து, அடுத்த மாதம் 6-ம் திகதி பிரிட்டனிடமிருந்து பரிபூரண தேசிய சுதந்திரம் பெற்றுக்கொள்கிறது.

தென் ஆபிரிக்கா, மொஸாம்பிக் ஆகிய நாடுகளால் சூழப்பட்ட சுவாஸிலாந்து 6,705 சதுரமைல் சுற்றளவுள்ள ஒரு சிறிய நாடு. 8,000 ஐரோப்பியர்கள் உட்பட சுமார் 4 லட்சம் மக்கள் இந்நாட்டில் வசிக்கிறார்கள்.

1903-ம் ஆண்டிலிருந்து ஒரு பிரிட்டிஷ் காலனி நாடாக இருந்துவரும் சுவாஸிலாந்து கடந்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூர் சுயாட்சி சுதந்திரம் பெற்றது. வெளிவிவகாரம், தேசிய பந்தோபஸ்து ஆகிய பொறுப்புகள் மட்டும் இப்பொழுது பிரிட்டனைச் சார்ந்திருக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் லண்டனில் நடைபெற்ற உயர்தர மாநாடொன்றின் போது சுவாஸிலாந்திற்கு செப்டம்பர் 6-ம் திகதி பூரண தேசிய சுதந்திரம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில்

## சோவியத் டாக்டரின் அனுபவம்

புதுடில்லி, ஆக 3
''பயங்கர நோய்களை ஒழித்து, ஆரோக்கியமுள்ள புதுதலைமுறையை வளர்க்க விரும்பும் இந்தியாவுக்கு சோவியத் டாக்டர்களின் அனுபவம் நன்மை அளித்துள்ளது'' என்று டாக்டர் ஓ. எப். தாரசோவ் கூறினார்.

சோவியத்குழந்தை வைத்தியத்துறைத் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் தாரசோவ் தமது பதவிக்காலம் முடிந்து சமீபத்தில் மாஸ்கோவுக்குத் திரும்பினார். அவர் தமது அனுபவத்தை வெளியிட்டார்.

கலாவதி சரண் ஆஸ்பத்திரியின் குழந்தை வைத்தியத்துறைபற்றி அவர் குறிப்பிடுகையில், வைத்தியத்துறையில் இந்திய டாக்டர்களுக்கு ஒத்துழைப்பதற்காக இது நிறுவப்பட்டதென்றும், குழந்தைகளின் நோய்களைக் குணமாக்க இது உதவியுள்ளதென்றும் கூறினார்.

அமெரிக்க

## விமானிகள் மூவர் விடுதலை

வாஷிங்டன், ஆக. 3
வடவியட்னுமில் கைதாகியிருந்து, பின் இப்போது விடுதலை செய்யப்பட்டுள்ள 3 அமெரிக்க விமானிகள் நேற்று அமெரிக்கா வந்து சேர்ந்தனர்.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும்

# இசைவிழா நடத்த இசையாசிரியர் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
இசையாசிரியர்கள் உள்ள பாடசாலைகளில் இசைமாணவர் சங்கம் நிறுவப்படவேண்டும் இச்சங்கங்களது யாழ்ப்பாண பிரதிநிதிகளைக் கொண்ட இசை மாணவர் மத்தியசங்கம் இசையாசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் இயங்கவேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழிசையாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சங்கீதபூஷணம் திரு. ஏ. நமசிவாயம் தலைமை வகித்தார்.

வட பெரும்பாக வித்தியாதிபதியின் ஆலோசனையோடு இசைவிழா ஒன்றை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடாத்த வேண்டுமென்றும், இசைவிழாவுக்கு இலங்கையில் உள்ள கல்லூரி அதிபர்கள் இசையாசிரியர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமெனவும் கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது. [ந. நி]

## ''வியட்னும் ஒரு நாள் செலவு எமக்கு 50 வருடங்களுக்கு போதும்''

உடுவில், சனி
'எமது இளைஞர்களும் பொதுமக்களும் பிறநாட்டுச் செய்திகளை போதியளவு அறிந்துகொள்வதில்லை இதற்குக் காரணம் வெளிநாட்டு செய்திகளை எமது தமிழ்ப் பத்திரிகைகள் போதிய முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்காமையே'.

சுன்னாகம் பட்டினசபை ஆதரவில் நூல்நிலைய ஆராய்வுக் குழுக் கருத்தரங்கில் 'வியட்னும்' பற்றி உரை நிகழ்த்திய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் திரு. சிவன் கதிர்காமர் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபர் திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு கதிர்காமர் மேலும் பேசுகையில், அமெரிக்கா, வியட்னும் போரில் ஒரு நாள் உணவுக்காக மட்டும் 40 கோடி ரூபாவை செலவிடுகிறது. இது இலங்கை மக்களின் எல்லாத் தேவைகளுக்குமாக 50 வருடங்களுக்குப் போதுமானது என்றும் அமெரிக்க மக்களின் மனமாற்றத்தினால் விரைவில் இப் பிரச்னை தீரக்கூடும் என்றும் அவர் கூறினார். இனி வரும் அமெரிக்க ஜனாதிபதியின் கையில்தான் சமாதானம் தங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## தென்வியட்னுமில் மோதல்

### 150 பேர் பலி

சைகோன், ஆக. 3
நேற்று தென் வியட்னுமில் அமெரிக்கருக்கும், வியட்கொங்கியருக்குமிடையே ஏற்பட்ட மோதலொன்றில் 50 அல்லது 60 அமெரிக்கர் கொல்லப்பட்டனர். வியட்கொங்கியர் பக்கத்தில் 92 பேர் கொல்லப்பட்டனர்.

## மெக்ஸிக்கோவில் பூகம்பம்

### 6 பேர் மரணம்

மெக்ஸிக்கோ, ஆக. 3
மெக்ஸிக்கோ நகரில் நேற்று ஏற்பட்ட பூகம்பமொன்றில், 6 பேர் உயிரிழந்தனர். மற்றும் 100 பேருக்குக் காயமேற்பட்டது.

சுமார் 72 விநாடிகள் மட்டும் நீடித்த இப்பூகம்பம், கட்டிடங்களை இடித்து விழுத்தியதுடன் தீமூளவும் உதவியது, மின்சாரம் தடைபட்டது... மறையும் பரவிவிட்டது.

## மரணம் பற்றி சந்தேகம்

### பொலிசார் விசாரணை

யாழ்ப்பாணம், ஞாயிறு
புங்குடுதீவைச் சேர்ந்த முத்தையாவின் மரணம் பற்றிய சில புதிய தகவல்கள் இப்போது பொலிசாருக்குப் பெரும் பிரச்னையைக் கொடுத்துள்ளது.

கடந்த மாதம் 9-ம் திகதி கயிற்றில் தொங்கியநிலையில் இவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவரது மரணம்பற்றிய சில தகவல்களில் இவர் கொலைசெய்யப்பட்டபின்னர் கயிற்றில் தொங்கவிடப்பட்டிருக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி இவருக்கு அருகில் இரு நாய்களும் இறந்துகிடந்ததாகவும், இவர் தற்கொலை செய்திருந்தால் கயிற்றில் தொங்கிய இவரின் கால்கள் நிலத்தில் முட்டிக்கொண்டிருந்திருக்க முடியாதெனவும் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான பூர்வாங்க விசாரணையை ஊர்காவற்றுறைப் பொலிசார் மீண்டும் தொடங்கியுள்ளனர். — [கா. நி]

## ஓவசியர்களின் சம்பளம்

உடுப்பிட்டி, சனி
உள்ளூராட்சிச்சேவை ஓவசியர்களின் சம்பளஅமுலாக்கம் தாமதம் நிவர்த்திசெய்யப்படவிருக்கிறது. இத் தகவலை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், வடக்கு, கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சேவை ஓவசியர்கள் சங்கத் தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சேவை ஓவசியர்களின் சம்பளம் உள்ளூராட்சிச் சேவை முரண்பாட்டுக் கமிஷனால் திருத்தியமைக்கப்பட்டு இறுதியறிக்கை இவ்வருடம் மார்ச் 2-ந் திகதி வெளியாகியும் இன்றுவரை அமுல் செய்யப்படாதிருப்பது குறித்து உள்ளூராட்சி ஓவசியர்கள் தூதுகோஷ்டி வட்டுக்கோட்டை எம். பி.யைச் சந்தித்தபோது தாம் அமைச்சருடன் உடனடியாகத் தொடர்புகொண்டதாகவும், சம்பள அறிக்கையை உடனடியாக அமுல்செய்யும்படி பணித்துள்ளதாக அமைச்சர் தன்னிடம் தெரிவித்ததாகவும் திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் தெரிவித்தார்.

## வீடமைப்புத் திட்டம்

புலோலி, சனி
குடத்தனை கரையோர மக்களுக்குப் பல வருடங்களுக்கு முன் பல்லாயிரக்கணக்கான ரூபாய் திட்டத்தில் வீடமைப்புத் திட்டம் ஒன்று கோலாகலமாக ஆரம்பிக்கப்பட்டது. எனினும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இத்திட்டம் இதுவரை அரைகுறையில் இருப்பதாகவும் இதுபற்றிக் கரையோரப் பகுதி மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகவும் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய்க்கிராமசபை புதிய எல்லை விபரம்

கோப்பாய், சனி

உள்ளூராட்சி அமைச்சினால் புதிதாகப் பிரிக்கப்பட்ட கோப்பாய் கிராம சபையின் 15 வட்டாரங்களினதும் எல்லை விபரங்கள் வருமாறு: எதிர்வரும் 1969 ஜனவரிமாதம் முதல் திகதி முதல் இவ்வெல்லை நிர்ணயம் நடைமுறையில் வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1-ம் வட்டாரம்

[வ ரம்பத்தறை]

கிழக்கு, கோப்பாய் உப்பாற்று வாவியும், தெற்கு மானிப்பாய் கைதடி வீதியும், மேற்கு: கோப்பாய் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஒழுங்கையும், வடக்கு: நீர்வேலிக் கிராம எல்லைகளும்

### 2-ம் வட்டாரம்

[இலகடி]

கிழக்கு: கோப்பாய் வடக்கு: பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஒழுங்கையும், தெற்கு: மானிப்பாய் கைதடி வீதியும், மேற்கு: உரும்பராய் கிராம எல்லைகளும், வடக்கு: நீர்வேலிக் கிராம எல்லைகளும்.

### 3-ம் வட்டாரம்

[அரசடி]

கிழக்கு: அம்மட்டன் கடவையும், தெற்கு: கூடம்பத்தை ஒழுங்கையும், மாணும் ஒழுங்கையும், மேற்கு: உரும்பராய் கிராம எல்லைகளும், வடக்கு: மானிப்பாய் கைதடி வீதியாலும் எல்லைபடுத்தப்பட்டது

### 4-ம் வட்டாரம்

[கோயில் வட்டாரம்]

கிழக்கு: கோப்பாய் உப்பு வாவியும், தெற்கு: கல்வியாவத்தை ஒழுங்கையும், கோப்பாய் தெற்கு கிராம எல்லைகளும், மேற்கு: அம்பட்டக்கடவை ஒழுங்கையும் கூடம்பத்தை ஒழுங்கையும், வடக்கு: கைதடி மானிப்பாய் வீதியும்,

### 5-ம் வட்டாரம்

[பிள்ளையார் கோவிலடி]

கிழக்கு: கோப்பாய் தெற்கு கிராம எல்லைகள்வரை செல்லும் கல்வியாவத்தை ஒழுங்கையாலும், தெற்கு: கோப்பாய் தெற்கு கிராம எல்லைகளாலும், மேற்கு: உரும்பராய் கிராம எல்லைகளாலும் வடக்கு: கூடம்பத்தைஒழுங்கையும் மாணும் ஒழுங்கையாலும் எல்லைபடுத்தப்பட்டது.

### 6-ம் வட்டாரம்

[நாவலடி]

கிழக்கு: கோப்பாய் உப்பாற்று வாவியும், தெற்கு: வீரபத்திரர் கோவில் ஒழுங்கையும் பழைய வீதியும் கல்வியாவத்தை ஒழுங்கையும், பள்ளக்கலட்டி ஒழுங்கையும், கோணல்பிட்டி ஒழுங்கையும், மேற்கு: உரும்பராய் கிராம எல்லைகளும், வடக்கு: கோப்பாய் தெற்கு கிராம எல்லைகளின் கீழ் எல்லையும்,

### 7-ம் வட்டாரம்

[கோயிலவை]

கிழக்கு: பழைய வீதியாலும், தெற்கு: கோண்டாவில் இருபாலை வீதியாலும், மேற்கு: கோண்டாவில் கிராம எல்லைகளாலும், வடக்கு: கோணல்பிட்டி ஒழுங்கையாலும், பள்ளக்கலட்டி ஒழுங்கையாலும், கல்வியாவத்தை ஒழுங்கையாலும் எல்லைபடுத்தப்பட்டது.

### 8-ம் வட்டாரம்

[வீரபத்திரர் கோவிலடி]

கிழக்கு: கும்பப்பிள்ளை ஒழுங்கையும், அரசடி வீதியும், தெற்கு: கோண்டாவில் இருபாலை வீதியும், மேற்கு: பழைய வீதியும், வடக்கு: வீரபத்திரர் கோயில் ஒழுங்கையும்.

### 9-ம் வட்டாரம்

[இருபாலை கிழக்கு]

கிழக்கு: கோப்பாய் உப்பாறும், தெற்கு: இருபாலை கோண்டாவில் வீதியும், மேற்கு: கும்பப்பிள்ளைஒழுங்கையும் அரசடி ஒழுங்கையும், வடக்கு: உச்சுவில் வயல் தென் எல்லையும்.

### 10-ம் வட்டாரம்

[இருபாலை]

கிழக்கு: கோப்பாய் உப்பாறும், தெற்கு: பட்டியடி ஒழுங்கையும், மேற்கு: கட்டைப்பிராய் செம்மணி வாய்க்காலும், வடக்கு: கோண்டாவில் இருபாலை வீதியாலும் எல்லைப்படுத்தியது.

### 11-ம் வட்டாரம்

[மடத்தடி]

கிழக்கு: கோப்பாய் உப்பாறும், தெற்கு: புதிய செம்மணி வீதியாலும், மேற்கு: கட்டைப்பிராய் செம்மணி வாய்க்காலாலும், வடக்கு: பட்டியடி ஒழுங்கையாலும் எல்லைப்படுத்தப்பட்டது.

### 12-ம் வட்டாரம்

[கோவில் தெரு]

கிழக்கு: கட்டைப்பிராய் செம்மணி வாய்க்காலாலும், தெற்கு: கூரையன்கடவை ஒழுங்கையும், கட்டைப்பிராய் வீதியும், வண்ணான் குளம் வீதியும், மேற்கு: திருநெல்வேலிக் கிராம எல்லையும் பருத்தித்துறை வீதியும், வடக்கு: இருபாலை கோண்டாவில் வீதியும் எல்லையாக அமைந்துள்ளன.

### 13-ம் வட்டாரம்

[கட்டைப்பிராய்]

கிழக்கு: கட்டைப்பிராய் செம்மணி வாய்க்காலும், தெற்கு: புதிய செம்மணி வீதியும், நல்லூர்க் கிராம எல்லைகளும், மேற்கு: யாழ்ப்பாணம் — பருத்தித்துறை வீதியும், நல்லூர் கிராம எல்லைகளும் வடக்கு: கூரையன் கடவை ஒழுங்கையும், கட்டைப்பிராய் ஒழுங்கையும்.

### 14-ம் வட்டாரம்

[கல்வியங்காடு]

கிழக்கு: யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியாலும் தெற்கு: நல்லூர் கிராம எல்லைகளாலும், மேற்கு: திருநெல்வேலிக் கிராம எல்லைகளாலும், வடக்கு வண்ணான்குளத்தடி ஒழுங்கையாலும் எல்லைப்படுத்தப்பட்டது.

### 15-ம் வட்டாரம்

[நாவன்மார்க்காடு]

கிழக்கு: கோப்பாய் உப்பாறும், தெற்கு நல்லூர்க் கிராம எல்லைகளும், யாழ்ப்பாண மாநகரசபை எல்லைகளும், மேற்கு: நல்லூர் கிராம எல்லைகளும், வடக்கு: புதிய செம்மணி வீதியும் எல்லையாக அமைக்கப்பட்டுள்ளன.

---

## சுன்னாகத்தில் மத்திய அலுவலகம்

குரும்பசிட்டி, சனி

இலங்கை கம்யூனிஸ்ட் (மாஸ்கோ சார்பு) கட்சியின் மத்திய அலுவலகம் ஒன்றினை திரு. வ. பொன்னம்பலம் நேற்று மாலை சுன்னாகத்தில் திறந்து வைத்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 4—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 8-00 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநினைவாழ்த்துகள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-15 பாட்டு — லீலாவதி இரத்தினசிங்கம், 6-45 பாவனம், 7-00 கிறிஸ்தவநிகழ்ச்சி, 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கர்நாடகஇசை, 9-45 பாட்டு — குருவாயூர் பொன்னம்மாள்.

---

## தடுத்ததாக வழக்கு

குரும்பசிட்டி, சனி

அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் கோவில் ஆலயப் பிரவேச வழக்கு மல்லாகம் பதில் மாஜிஸ்ட்ரேட் திரு. ஜீ. வி. பாலசிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மீண்டும் மேல்விசாரணைக்கு இம்மாதம் 27-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கே. கணேசு என்பவரை அச்சுவேலி உலவிற்குளப்பிள்ளையார் கோவில் முகாமையாளர் ஆர். குமாரவேலு ஆலயத்தின் உள்ளே சென்று தரிசிக்க விடாது தடுத்ததாக இவ்வழக்கை காங்கேசன்துறைப் பொலிசார் தொடர்ந்துள்ளனர்.

---

## தேவாலயத்தில் திருட்டு

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு புனித சவேரியார் தேவாலயத்தில் பணமும், பூசைக்குரிய பாத்திரங்கள் சிலவும் களவு போயுள்ளதாக ஊர்காவற்றுறைப் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

---

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

குரும்பசிட்டி, சனி

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாயிருந்த டாக்டர் திரு. க. காங்கேசு தற்போது யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் இராஜகுலியர் நீர்கொழும்பிற்கு மாற்றலாகியுள்ளார்.

---

## அரசாங்க அதிபருக்கு மகஜர்

சுழிபுரம், சனி

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேனன் அபயசேகராவுக்கு ஓர் அவசர மகஜரை பண்டத்தரிப்புப் பகுதி மக்கள் அனுப்பி வைத்துள்ளனர். பண்டத்தரிப்பில் பெயரளவில் இருக்கும் கிராம முன்னேற்றச் சங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பொதுக்கூட்டம் கூட்டாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி கிராமத்தின் முன்னேற்றம் கருதி சங்கம் [illegible] கூட்டுமாறு மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

# "அரசியல்வாதிகளை ஆசிரியர் நம்பியிருப்பது கூடாது"

உடுப்பிட்டி, சனி

'வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளதால் ஆசிரியர்கள் கடன்பட்டே வாழ்க்கை நடத்தவேண்டியுள்ளது. அத்துடன் ஆசிரியர்கள் வேறெவ்வித கருமமும் செய்து சம்பாதிக்க முடியாத இக்கட்டான நிலையில் உள்ளனர். ஆசிரியர்களின் சம்பள உயர்வு மூலமே ஆசிரியர்களின் கஷ்டங்களுக்கு விடிவு ஏற்பட முடியும்' என வதிரி வட மத்திய ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்ற வடமராட்சித் தமிழாசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் திரு. வீ. அந்தோனிப்பிள்ளை கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஆசிரியர்களுடைய சங்கங்கள் பலமுள்ளவையாயிருந்தாலே எந்த முயற்சியிலும் வெற்றி காண முடியுமென்றும் ஆசிரியர் சங்கங்கள்பிரிந்திருப்பதினால் ஆசிரியர்களுக்கு எவ்வித பிரயோசனமுமில்லையென்றும் அவர் சொன்னார்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க வட இலங்கைப் பிரதிநிதி திரு. ஆ. க. மாணிக்கம் பேசுகையில், 'பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த பின்னர் ஆசிரியர்கள் ஆசிரியர் சங்கத்துடன் ஒத்துழைப்பதைக் குறைத்துக்கொண்டனர். அடிக்கடி நிகழும் ஆசிரியர் இடமாற்றங்களே இதற்குக்காரணம் இடமாற்றப் பிரச்னை அரசியல் தலைவர்களின் சூழ்ச்சியே. அரசியல் வாதிகளை நாம் நம்பியிருப்பதுகூடாது' என்றார்.

திரு. தணிகாசலம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார். வேறு பலரும் பேசினர்.

புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர் திரு. வீ. அந்தோனிப்பிள்ளை, உப தலைவர்கள் திருவாளர்கள் ஏ. கே. செல்லத்துரை, பாக்கியநாதன், கதிர்காமத்தம்பி, காரியதரிசி திரு. தணிகாசலம், உப காரியதரிசி திரு. பி அன்னுச்சாமி. தனாதிகாரி திரு. சந்தசாமி.

---

## பூநகரி—வேரவில் ப.நோ.கூ. சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பூநகரி—வேரவில் ப.நோ கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. ஆர். வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

சென்ற வருட விவசாயக் கடன் கட்டாதவர்கள் பற்றி ஆலோசித்து பணம் கட்டாதவர்கள் இம்மாதம் 10-ந் திகதிக்குமுன் கட்ட வேண்டுமென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கூட்டுறவுப் பரிசோதகர்கள் திரு. கே. வைத்திலிங்கம், அரு. ரீ காசிராசா ஆகியோர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

புதிய தலைவராக ஆர். வேலுப்பிள்ளையும், காரியதரிசியாக திரு. கே. குகதாசனும் தெரிவு செய்யப்பட்டனர். [ந நி.]

---

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கருப்பனை அரசினர் தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய நாவற்குழியைச் சேர்ந்த திரு. எஸ். நாகரத்தினம் சென்றமாதம் வேலணை ஐயனார் தமிழ்ப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு மீண்டும் அடுத்த மாத முற்பகுதியில் மறவன்புலவு மகா விஷ்ணு தமிழ்ப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ந. நி

## சிறந்தவிவசாயி நாளை பரிசு பெறுவார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி யாழ்ப்பாணம் மேற்குகூட்டுறவு ஆக்க ஆணையாளர் பகுதியில் சிறந்த கூட்டுறவு விவசாயிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நாளை யாழ். மாநகரசபை மண்டபத்தில் வைத்துப் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. வட பகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் ஆதரவில் இவ்விழா நடைபெறும்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. டபிள்யூ. பத்திராஜ கலந்து கொள்வார். வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேனன் அபயசேகராவும் இதில் கலந்து கொள்வார். திரு. வி. பொன்னம்பலம், திரு ஆர். இராசரத்தினம் ஆகியோரும் உரையாற்றுவார்கள். [ந. நி.]

---

## மானிப்பாய் வட்டாரஎல்லை விஸ்தரிப்பு

உடுவில், வெள்ளி

ஐந்து வட்டாரங்களாக இருந்துவந்த மானிப்பாய் பட்டினசபை எல்லை விஸ்தரிக்கப்பட்டு தற்போது ஏழு வட்டாரங்களாக்கப்பட்டுள்ளது.

புதிய வட்டாரங்கள் பின் வருமாறு:-

கட்டுடை வட்டாரம், மெமோரியல் ஸ்கூல் வட்டாரம், ஆஸ்பத்திரி வட்டாரம், பிரவர் கோவில் வட்டாரம், கல்லூரி வட்டாரம், வேலக்கை கோவில் வட்டாரம், சந்தை வட்டாரம்.

---

## திருக்கேதீச்சரம் மகாகும்பாபிஷேகம்

திருக்கேதீச்சரம், சனி

திருக்கேதீச்சரம் ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத கேதீச்சரநாதர் ஆலய ராஜ கோபுரத்துக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் வரும் 19ம் திகதி மகாகும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது.

---

## ஆசிரிய லட்சணம் உடுப்பிட்டி எம். பி. விளக்கம்

உடுப்பிட்டி, சனி

'ஆசிரியர்கள் சம்பளத்திற்காக மட்டும் சேவை செய்யாது மாணவர்களின் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து செயல்படுவதே சிறந்தது. இதற்கு இங்கு இளைப்பாறும் ஆசிரியர் திரு. சிற்றம்பலம் முன்மாதிரியாகத் திகழ்ந்தவர். இவரிடம் நான் கல்வி கற்ற காலத்தில் பெற்ற அறிவே இன்று என்னை உயர்த்தியுள்ளது'

இவ்வாறு உப சபாநாயகரும, உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் சுமார் 40வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிய திரு. ஐ. சிற்றம்பலத்திற்கு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவுக்குத் தலைமைவகித்து அப்பேசுகையில் கூறினார்.

மற்றும் கிளிநொச்சி இ. போ. ச. டிப்போ நிர்வாகி திரு. க. பாலசுப்பிரமணியம் பண்டிதர் திரு. ஆர். கே. முருகேசு, அதிபர் சோமசுந்தரம், முன்னாள் அதிபர் திரு சிவப்பிரகாசம் உட்படவேறு பலரும் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### கேள்வி விளம்பரம்

**உரும்பராய் பட்டினசபை**

ஊரெழு - கோப்பாய் ரோட் கல்ரோட்டாக அமைப்பதற்கு உரும்பராய் பட்டினசபையால் கேள்விப்பத்திரங்கள் 21-8-68ம் திகதி காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபாய் 5000/-க்கு மேல் பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களுக்கு 18-8-68ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம் கேள்விப்பணம் ரூபா 50/-ம் கட்டியதின் பேரில் பட்டின சபையிலும் கேள்விப்பத்திரம் வழங்கப்படும். பத்திரப்பணம் ரூபா 10/-ம் திருப்பிக்கொடுக்கப்பட மாட்டாது.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டினசபை உரும்பராய்

பட்டினசபை அலுவலகம்,
உரும்பராய், 2-8-68
910

**யாழ்ப்பாண மாநகரசபை**

### வீடுவளவு விற்பனை

2-8-68 தொடக்கம் 9-8-68வரை வீடுவளவுகள் விற்பனை செய்யப்படும் என்பது பற்றி, 5-7-68ம் திகதிய 14809ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி [பகுதி 4க]யில் பிரசுரிக்கப்பட்ட வீடுவளவு விற்பனவு மேற்கொண்டு அறிவிக்கப்படும்வரை பின்போடப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

வே. தங்கவேலு.
பதில் மாநகரசபை
ஆணையாளர்.

மாநகரமண்டபம்,
யாழ்ப்பாணம்,
30-7-68. 911


3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
ரகுநாதன் - சந்திரகலா
தங்கவடிவேல்
நடித்த
நிர்மலா



MANOHARA JAFFNA
Daily at 4-45, 7-00 & 9-45 p. m.
Jonas Cord Jr.
in
GARPETBAGGERS
(Adults only) [Scope- Colour]

7ந் திகதி முதல்
மனோகரா (யாழ்ப்பாணம்) ஸெயின்ஸ்தான் (கிராண்ட்பாஸ்)
* ஜெய்சங்கர் * எல். விஜயலட்சுமி
கே.பி.சுந்தராம்பாள், நாகேஷ், தங்கவேலு
நடித்த
உயிர்மேல் ஆசை



இப்பொழுது மக்கள் ஆதரவுடன்
வீறுநடை போடுகிறேன்
நான்
பிளாஸா (கொழும்பு) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கிங்ஸ்லி (கொழும்பு) விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் நான்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
கெபிட்டல்
(கொழும்பு)
★ ராஜ்கபூர்
★ ராஜேந்திரகுமார்
★ வைஜந்திமாலா
நடித்த
சங்கம்
(டெக்னிக் கலர்)


## இவர்கள் யாழ்ப்பாணம் வருவர்

குரும்பசிட்டி, சனி

கொழும்பு தெற்கு இரண்டாவது எம். பி. திரு. பெரி ஸண்டு சொய்ஸா, அநுராதபுரம் எம். பி. திரு. கே. பி. இரத்நாயக்கா, திரு. எம். பண்டிதா ஆகியோர் இம்மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்கின்றனர்.

சுன்னாகம் சந்தைக்கருகாமையிலுள்ள மைதானத்தில் பட்டினசபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் ஆகஸ்ட் ஹர்த்தால் ஞாபகார்த்ததினப் பொதுக்கூட்டத்தில் இம்மூவரும் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்வார்கள்.

மந்திகை ஆஸ்பத்திரிக்கு

## சத்திரசிகிச்சைக் கூடம்

புலோலி, சனி

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் ஒரு சத்திர சிகிச்சைக் கூடம் இல்லாதகுறையை முன்னிட்டு உடுப்பிட்டி எம். பி.யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் பயனாக நிவர்த்தியாக இருப்பதாகத் தெரிகின்றது. இங்கு சத்திர சிகிச்சைக் கூடத்திற்கும் குடிநீர்த் திட்டத்திற்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இவற்றுக்கான வேலைகள் அநேகமாக செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு இசைவாக சுகாதார இலாகா தற்பொழுது ஒப்பந்தங்களைக் கோரியுள்ளதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

மந்திகை வைத்தியசாலையை மேலும் விஸ்தரிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அவர் சொன்னார்.


REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Nigel Green
Mary Badham
in
LET'S KILL UNCLE
(Adults)

2வது மாதம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
பி. சரோஜாதேவி
நடித்த
அரச கட்டளை

6-8-68 வரை
மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி:6-30 9-30
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
பாகப்பிரிவினை


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**காணி:**

சங்கானை வலிகாமம் ரோட், 10-ம் கட்டை அச்சுவேலி இறை, சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையின் முன்பாக உள்ள பெரியதெருவின் அருகாமையில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீடு, கடை, தொழிற்சாலை அமைப்பதற்கு நல்ல வசதியான இடம். முழுமையாகவோ அன்றேல் பகுதிபகுதியாகப் பிரித்தோ விற்பனை செய்யப்படும். விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும். ரூக் ஜோசெப், ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1286

**கார்:**

1ஸ்ரீ மொறிஸ் மைனர் 1000 விற்பனைக்குண்டு. 349 நாவலர்ரோட், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் பார்வையிடலாம். 1589

### விற்பனைக்கு

எடுத்துச் செல்லக்கூடிய இம்பீரியல் ரைப்றைற்றர் புதிது. அத்துடன் இரண்டு அங்குலமைப் 15 அடியும் 22 அடியும் கப்பியில் சேர்த்து எழுதுக. நயாந்தர்தோரி, தெல்லிப்பழை மேற்கு. 1293

**காணி:**

முன்னேறி வரும் வடகோப்பாயில் இராசவீதியில் உள்ள வெலிங்டன் பாமுக்கு அருகாமையில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. த. குமாரசாமி, பழம் ரோட்டு, கோப்பாய் தெற்கு, கோப்பாய். 1291

உடுவில், வெள்ளி

இதுவரை கொடாமலிருக்கும் வரிப்பணத்தை வரியிறுப்பாளர்கள் உடனடியாகச் செலுத்தி உதவி புரியும்படி கொக்குவில் கிராமசபையின் புதிய தலைவர் திரு. சபாபதி வேண்டியுள்ளார்.

## வீட்டுத் தோட்டப்போட்டியில் வாகை சூடினர்

உரும்பராய், சனி

இணுவில் விவசாயக்கழகத்தின் ஆதரவுடன் தொகுதிவாரியாக கிராமங்கள்தோறும் பிரயோக போஷாக்குத் திட்டத்தினரால் நடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் பங்குபற்றிய கோப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த ஐந்து கிராமங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர் விபரம் வருமாறு:

திருநெல்வேலி: நிமல சோதி கந்தையா [இ. வி. கழகம்], தங்கரத்தினம் கதிரவேலு [மா. சங்கம்], மாலசரஸ்வதி கணேசு [இ. வி. க].

ஊரெழு: விநாசித்தம்பி குலசேகரம் [இ. வி. க], தேவி சுந்தரலிங்கம் [மா. ச], புஷ்பரத்தினம் வைத்திலிங்கம் [மா. ச].

உரும்பராய்: சந்திராதேவி சரவணமுத்து [இ. வி. க.], பத்மலோஜினி இராஜதுரை [இ. வி. க.], சின்னத்துரை பத்மநாதன் [இ. வி. க].

கோப்பாய் வடக்கு: தில்லையம்பலம் அரசபிள்ளை [இ. வி. க], பூரணச்செல்வி வீரவாகு (மா. ச), வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் இ. வி. க].

கோப்பாய் தெற்கு: கனகசபை புவனேந்திரன் (இ. வி. க.), சுப்பிரமணியம் கிருஷ்ணதேவன் [இ. வி. க.), சாந்தினி இராஜையா [மா. ச].

ஐந்து தொகுதிகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டவர்கள் விபரம் வருமாறு:

தேவி சுந்தரலிங்கம் [ஊரெழு மா. ச), புஷ்பரத்தினம் வைத்திலிங்கம் [ஊரெழு மா. ச.], தில்லையம்பலம் அரசபிள்ளை [கோப்பாய் வடக்கு இ. வி. க].

இவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் விரைவில் வழங்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

பிரயோக போஷாக்குத் திட்டத்தின்கீழ்

## பயிற்சிபெற்ற 160 பேரில் 40 பேர் சித்தியடைந்தனர்

உரும்பராய், சனி

அரசாங்கத்தின் பிரயோக போஷணைத்திட்டத்தின் கீழ் உரும்பராய் இணுவில் விவசாயக்கழகத்திலிருந்து 168 பேர் விவசாயம் மற்றும் கோழி மிருக வளர்ப்பு வீட்டுப்பணி சம்பந்தமான போதனை பெற்றனர். இருவாரங்கள் உரும்பராயில் நடைபெற்ற இப்போதனை வகுப்பு முடிவில் நடத்தப்பட்ட பரீட்சையில் 40 பேர் சித்தியடைந்தனர். சித்தியடைந்தவர்களில் ஒருவரைத் தெரிவுசெய்து குண்டசாலை மத்தியதொழிற் பாடசாலையில் பயிற்சியளிக்குமாம்.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்பப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுமென்றும், அடுத்தமாத நடுப்பகுதியில் இங்கு நடைபெறவிருக்கும் இணுவில் விவசாயக்கழக ஆண்டுவிழாவின் போது பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படுமென்றும் தெரிகின்றது.

[illegible] வகுப்பில் கலந்துகொண்ட சகலரும் தமது பயிற்சிக்காலத்தில் நாள் ஒன்றுக்கு 3 ரூபா பணம் பெற்றது குறிப்பிடத்தக்கது. பயிற்சியில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

கோழிவளர்ப்பு:- ஐயாத்துரை சோமசுந்தரம், நடராசா செல்வராசா, பொன்னுத்துரை சற்குணநாதன், குலத்துரை குலத்துங்கசேகரம், முருகேசு சண்முகம், துரையப்பா விக்னேஸ்வரராசா, ஐயாத்துரை சிவபால சுந்தரம், கந்தையா புவனேஸ்வரன், செல்லப்பா சிவலிங்கம், தர்மரத்தினம் ஆனந்தராசா.

மிருகவளர்ப்பு:- செல்வநாயகம் கமலேஸ்வரன், பரமநாதன் கணேஸ்வரன், கந்தையா ஜெயபாலன், சின்னத்தம்பி கந்தசாமி, சுப்பையா காசிநாதன், சதாசிவம் லோகநாதன், செல்லத்துரை விக்னேஸ்வரன், நாகலிங்கம் பத்மநாதன், சிவகுரு மகாலிங்கம், இராசரத்தினம் சரசராசா.

விவசாயம்:- சொக்கலிங்கம் நவபாலசிங்கம், துரையப்பா செல்வராசா, சின்னத்துரை பத்மநாதன், கந்தையா தங்கராசா, குருநாதர் இந்திரகுமார், இராசமுத்தையா தயாபரன், இரு

6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்து விநியோகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து இம்மாதம் 9ம் திகதி முதல் 17-ம் திகதி வரை யாழ்ப்பாண நகரத்தில் வழங்கப்படவிருக்கின்றது. யாழ்ப்பாண மாநகர சபைச் சுகாதாரப்பகுதியினர் இதனை ஒழுங்கு செய்துள்ளனர்.

பின்வரும் திகதிகளில் குறிப்பிட்டவட்டாரங்களில் தடுப்பு மருந்து விநியோகம் செய்ய ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

9ம் திகதி: 1ம், 2ம் வட்டாரங்கள். 10ம் திகதி: 3ம், 4ம், 16ம் வட்டாரங்கள். 11ம் திகதி: 5ம், 6ம் வட்டாரங்கள். 12ம் திகதி: 7ம், 8ம் வட்டாரங்கள். 13ம் திகதி: 9ம், 10ம் வட்டாரங்கள். 14ம் திகதி: 11ம், 12ம், 17ம் வட்டாரங்கள். 16ம் திகதி: 13ம், 14ம் வட்டாரங்கள். 17ம் திகதி: 15ம் வட்டாரம்.

மாநகரசபைச் சுகாதாரப் பரிசோதகர் திரு. கதிர்காமலிங்கம் தடுப்பு மருந்துகளை வழங்குவார். [ஈ. நி.]

உடுப்பிட்டியில்

# அலவாங்கு, கத்தி, கம்பிகளுடன் சண்டை

## இரு பெண்களும் சிறுவனும் ஆஸ்பத்திரியில்

இணுவாணன், சனி

உடுப்பிட்டியில் இன்று மாலை இருசாராருக்கிடையில் நடந்த மோதலில் இரு பெண்களும் ஒரு சிறுவனும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அலவாங்கு, கத்தி, இரும்புக் கம்பிகள் தாராளமாக இந்தக் கலவரத்தில் உபயோகிக்கப்பட்டனவாம்.

உடுப்பிட்டியிலுள்ள போக்காடு என்ற ஒழுங்கையில் நடந்த இந்த கைகலப்பில் திருமதி அன்னம்மா வைத்திலிங்கம், அவரது சகோதரி முத்தாச்சி, 16 வயதுச் சிறுவன் எஸ். தெய்வேந்திரம் ஆகியோர் தலையில் வெட்டுக் காயங்களுடன் பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் சம்பந்தமாக பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் சின்னன் என்ற நாமி சின்னப்பன், இவருடைய மனைவி பாரி, மகள் ரத்தினம் ஆகிய மூவரையும் பொலிஸார் தேடுகின்றனர்.

எல்லைத் தகராறொன்றைத் தொடர்ந்து கலவரம் மூண்டதாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணை செய்கின்றனர்.

## தென்னிலங் . . ,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நல்ல ரகத் துணிகள் உற்பத்தியாகின்றன. தென்னிலங்கையிலிருந்து வடபகுதிக்கு நெசவு ஆசிரியைகளை நியமிப்பதன் மூலம் வடபகுதியில் நல்ல ரகத் துணிகளை உற்பத்திசெய்யலாம். அத்துடன்வடபகுதிக்கும் - தென்னிலங்கைக்கும் இடையேஒரு நல்லெண்ணப் பாலம் ஏற்படவும் இது வழிவகுக்கும்'' என திரு. கனகரத்தினம் கூறினார்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெகநாதன் பேசுகையில் கூட்டுறவு இயக்கம் மூலம் பொருளாதார வளர்ச்சி பெறலாமென்றும் இஸ்ரேல், ஜப்பான், இந்தியா முதலிய நாடுகளில் கைத்தறிகள் விசைத்தறியாக மாறியது ஓர் எடுத்துக்காட்டென்றும் கூறினார். தொண்டமானறு பாடசாலை அதிபர் திரு. வீ. தம்பிப்பிள்ளை, சமாஜச் செயலாளர் வழக்கறிஞர் திரு. கே. கணபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## சரக்கு வண்டி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தண்டவாளத்தைவிட்டு இறங்கி விபத்துக்குள்ளானது. இந்த ரயிலில் பிரயாணிகள் எவரும் இல்லாவிட்டாலும் சாரதியும் இதர ஊழியர்களும் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். இந்த விபத்திலும் ரயில் பாதையும் ரயில் வண்டியும் கணிசமான சேதமுற்றன. இதனுல் கொழும்பிலிருந்து வந்த யாழ்தேவியும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற யாழ் தேவியும் இடை நடுவில் தத்தளிக்கின்றன. விபத்து நிகழ்ந்த இடத்தில் சீர்மைப்பு வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. பாதை சீராக்கப்பட்டதும் போக்குவரத்து சீரடையும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அத்தனை விரைவில் பாதை சீர்செய்யப்படும் என்று ரயில்வே அதிகாரிகள் கூறினுர்கள். விபத்து நடந்தஇடத்துக்கு ரயில்வே அதிகாரிகளும் ஊழியர்களும் விசேஷவண்டிமூலம் போயுள்ளனர்.

## ஒரு ஆக்கிரமி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### தொழிலாளியைப் பாதிக்கும்

இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத் தலைவர் திரு. டி. ஜீ. வில்லியம் கருத்துத் தெரிவிக்கையில், சாதாரண மனிதனின் மதுபானத்தின் விலையை இரண்டு ரூபாயாக அதிகரித்தது தொழிலாளியை நிச்சயம் பாதிக்கும் என்றுர்.

பணவசதி படைத்தோர் விஸ்கி போன்ற விலையுயர்ந்த மதுபானத்தை பழைய விலையிலேயே வாங்கி அருந்துவர். ஆனுல் சாதாரண மக்கள் தமது குடிவகைக்கு அதிக பணம் கொடுக்கவேண்டியுள்ளதென்று திரு. வில்லியம் சொன்னுர். சிகரட்டின் விலை உயர்த்தப்பட்டதையும் அவர் குறை சொன்னுர்.

வருமானவரியில் அளிக்கப்பட்ட சிறு சலுகையால் பயனில்லையென்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு அதன் பயனை இல்லாமல் செய்துவிட்டதென்றும் திரு. வில்லியம் கூறினுர்.

இறக்குமதி ஏற்றுமதி

## சமூகமும் மனிதனும்

### உபசபாநாயகர் கருத்து

உடுப்பிட்டி, சனி

''பொது மக்களிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவேண்டும். இல்லாவிடின் சமூகம் என்ற பெயரே ஏற்படமுடியாது. ஒவ்வொரு பிரஜையும் பிறருடன் கலந்து உறவாடுவதன் மூலம் புதிய உண்மைகளை அறிவான். புதிய ஆராய்ச்சிகள் செய்வான். தபால் சேவை இதற்குப் பெரிதும் உதவுகின்றது. இப்பகுதி மக்கள் தொலைபேசி வசதி இல்லாது அனுபவித்து வந்த நெடுங்கால கஷ்டம் இன்றுடன் தீருகிறது. தபால் இலாகா விழிப்புடன் செயலாற்றி வருவது பாராட்டிற்குரியது''.

இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கரவெட்டி கிழக்கு உப தபாற் கந்தோருக்கு வழங்கப்பட்டுள்ள புதிய டெலிபோன் சேவையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

வடபெரும்பாக தபாற் தந்தி அதிபர் திரு. மா. தர்மலிங்கம் உட்பட வேறு பலரும் பேசினர். உபதபாற் கந்தோர் அதிபர் திரு. தாமோதரம் நன்றியுரை கூறினுர்.

## சமூக அரசியல் பிரச்னையாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''தீண்டாமை ஒழிப்பு ஒரு சைவசமயப் பிரச்சனையல்ல. அது ஒரு சமூகப்பிரச்சனை. ஆகவே அது ஒரு அரசியல் பிரச்சனை. அதனுல் தான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி அதில் தலையிட்டு வேலை செய்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக நிலப்பிரபுத்துவத்தின் கீழ் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலைப் போராட்டமே தீண்டாமை ஒழிப்புப் போராட்டமாகும். இப் போராட்டத்தின் வெற்றிக்குத் தமிழ் மக்கள் மட்டுமல்ல தென்னிலங்கையிலுள்ள சிங்கள மக்களும் ஆதரவளிக்க வேண்டியது அவசியமாகும்'

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச அமைப்பாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி மட்டுவிலில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

## பயிற்சி......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாவுக்கரசு தங்கேஸ்வரன், சண்முகராசா குமரேஸ்வரராசா, தம்பிராசா கனகலிங்கம், தனபாலசிங்கம் சிவலோகநாதன்.

வீட்டுப் பணி:- வாசுகி பொன்னுத்துரை, செல்லத்துரை செல்வராஜேஸ்வரி, கணபதிப்பிள்ளை புண்ணியவதி, நிகழ்மதி குட்டித்தம்பி, நளினி இராசதுரை, குகனேஸ்வரிசோமசுந்தரம், நாகலிங்கம் சந்திரபூபதி, நடராசா ராணி, நாகலிங்கம் கமலாதேவி, பத்மராணி ராஜசேகர.

பாளர் சங்கத் தலைவர் திரு. ஒலிவர் பெரேரா வரவு-செலவுத் திட்ட யோசனைகளை வரவேற்ருர்.

இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கச் செயலாளரும் புரட்சிவாத லங்கா சமசமாஜக்கட்சித் தலைவருமான திரு. பாலா தம்பு [illegible] வரவு-செலவுத் திட[illegible] மீண்டும் ஒரு மோசடி என்ருர்.

# அரசாங்கம் புறக்கணிக்கிறது; பின் ஏனிந்த மௌனம்?

## தமிழரசுத் தலைவரைக் கேட்கிருர் கி. ச. தலைவர்

உடுவில், சனி

''பிரதமரசலும் ஆளும் கட்சி உறுப்பினர்களாலும் மாவட்டசபை மசோதா கொண்டு வர முடியாது என்று தெரிவித்த பின்னரும் அரசாங்கத்துக்கு உதவி கொடுத்து வருவது கவலைக்குரிய விஷயமாகும். 1965-ம் ஆண்டு ஐக்கிய தேசியகட்சியை ஆட்சியில் அமர்த்த நாம் செய்த உதவிக்கு பிரதியுபகாரமாக தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றது. இந்நிலையில் தமிழரசுக்கட்சி தன் நிலைமறந்து மௌனம் சாதிப்பது கூடாது. பொறுப்பற்ற முறையில் இருந்து விடாது இவற்றை ஆராய பொதுச்சபையை யாழ்ப்பாணத்தில் கூட்டுமாறு வேண்டுகிறேன்'

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகத்துக்கு உடுவில் கிராம சபை தலைவர் திரு. சி. மூத்துலிங்கம் எழுதியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறுகேட்டுக் கொண்டார்.

விடுதலை தவறிக் கெட்டு தாழ்வுற்று வறுமைமிஞ்சி பாழ்பட்டு நிற்கும் எமது தமிழ் இனம் தங்கள்மேல் வைத்த நம்பிக்கையில் ஐயுறவேண்டிய காலம் இன்று ஏற்பட்டுள்ளதைக் காண மனம் வருந்துகிறேன் என்று திரு. முத்துலிங்கம் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மதகினுள் பாய்ந்தது

கேகப்பாய், சனி

கோப்பாயிலுள்ள கராஜொன்றிற்கு சொந்தமான கார் ஒன்று கோப்பாய் நாவலர் பாடசாலைக்கருகாமையிலுள்ள மதகினுள் பாய்ந்தது. பருத்தித்துறை வீதியினுல் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸை விலத்துகையிலேயே இச்சம்பவம் நடைபெற்றது.

## விபத்தில் கார்கள்

உடுப்பிட்டி, சனி

நெல்லியடியில் நேற்று நண்பகல் நிகழ்ந்த கார் விபத்தில் இரு கார்களும் சேதமுற்றன. நெல்லியடிச் சந்தியில் இருபாதைகளிலிருந்தும் வந்துகொண்டிருந்த மூன்னுள் மந்திகை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் பொன்னுச்சாமியின் காரும் ஒரு வர்த்தக ஸ்தாபனத்திலொருமே மோதுண்டவையாகும்.

பருத்தித்துறை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

## இராமநாதன் இல்லம் சாம்பியன்

குரும்பசிட்டி, சனி

மகாவி அரசினர் ஆசிரிய கலாசாலை இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் 344 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட இராமநாதன் இல்லம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சண்முகநாதன், பொன்னையா ஆகிய இரு இல்லங்களும் முறையே 261, 225 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டன.

வடமாநில உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றி பெற்றோருக்கு பரிசுகளை வழங்கினுர். போட்டிகளில் செல்வி எஸ். சங்கரப்பிள்ளை சிறந்த விளையாட்டு வீராங்கனையாகவும் ஜே. பி. பெனடிற், கே. இராஜேஸ்வரன் ஆகியோர் சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

## எங்கு மறைந்ததோ?

காங்கேசன்துறை, சனி

தொழிற்கந்தோரில் வேலையில்லாதோர் பதிந்த கார்ட்டுகள் எங்கே மறைந்தன என்ற புதுக் கேள்வி ஒன்று இப்போது எழுந்துள்ளது.

வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவிக்கும் வாலிபர்களுக்கு இது ஒரு வேதனை தவிப்பு. தொழிற் கந்தோர் கார்ட்டுகள் மாயமாக மறைந்த காரணம் என்னவென்று தெரியவில்லையாம். சமீபத்தில் கார்ட் புதிப்பிக்கச் சென்ற வாலிபர் ஒருவர் மூன்று மணித்தியாலங்களின் பின் இரண்டு வாரங்கள் கழித்து காரியாலயத்துக்கு திரும்பி வரும்படி அனுப்பப்பட்டாராம்.

## வல்வையில் வாள்வெட்டு சம்பவம்

### மூவர் ஆஸ்பத்திரியில்

இணுவாணன், சனி

வல்வெட்டித்துறையில் இன்று நண்பகல் நடந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் காயங்களுக்குள்ளான மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தியாகராசா, கதிர்காமத்தம்பி, தம்பி திரவியம் ஆகிய மூவரும் காயங்களுக்குள்ளானவர்களாவர். பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் இவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் எஸ். தங்கவடிவேல் என்பவர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் இது சம்பந்தமாக தொடர்ந்து புலன் விசாரணை செய்கின்றனர்.

## சைக்கிள் மறைந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

தேவாலயத்துக்கு முன்னுல் விட்டுச் சென்ற புத்தம் புதிய ஹம்பர் சைக்கிளை சிறிதுநேரத்தின் பின் திரும்பிவந்து பார்த்தபோது காணவில்லையாம். நேற்று காலை யாழ்ப்பாணம் அடைக்கலமாதா தேவாலயத்துக்கு முன்னுல் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதுசம்பந்தமாக சைக்கிள் சொந்தக்காரரான யாழ் தபால் நிலையத்தைச் சேர்ந்த ஏ. அடைக்கலம் யாழ்ப்பாணம் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

பொலிஸார் புலன்விசாரணை செய்கின்றனர். (தே. நி)

## மரண அறிவித்தல்

### மகேந்திரன்

கரவெட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய மலேயன் பென்சனர் வல்லிபுரம் இராசாவின் மூத்த மகன் மகேந்திரன் 2-8-68 காலை மலேசியாவில் அகால மரணமானார். இத்தகவலை உறவினர்களும், நண்பர்களும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

வ. இராசா, கரவெட்டி, கிழக்கு. 1590

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேல வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org